www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சர்வதேச சங்கீத கரத்தட்டு

எழுதியவர் : எம்.பி.கோணேஸ்.

எமது பாரம்பரிய கர்நாடக சங்கீதத்தினையும் ஆதாரமாகக் கொண்டு புதிய முறையில் எழுதப்பட்டுள்ள இச்சங்கீத முறை ஆரம்பத்தில் சில சிரமங்களை ஏற்படுத்திக் கொண்டாலும் தொடரும் பயிற்சியின் மூலம் விரைவில் நீங்களும் இசைக் கலைஞர் ஆகலாம்.

இப்புத்தகத்தின் உதவியுடன் சுயமாகவோ அல்லது சர்வதேச சங்கீதத்தினை முறைப்படி பயின்ற ஒரு ஆசிரியரின் உதவியுடனோ ஒரு கரத்தட்டினை வெகுவிரைவில் கற்றறிந்து கொள்ளலாம்.

இப்புத்தகத்தினை பெற்றுக் கொள்ள வேண்டிய முகவரி:

H. P. konesch
Schützendelle 2
4052 korschenbroich 3
02182 - 59052.

---

11ம் பக்க தொடர்ச்சி....

பிறகு..... இவை யாவும் பகிரங்கமாக விவாதிக்கப்பட வேண்டியவை என பலர் எண்ணலாம். நாமும் அப்படியேதான் எண்ணுகிறோம். அவர்களுக்கு நடுவில் பிரச்சாரம் செய்யும் "தொழிலாளர் பாதை"க்காரர்களையும், சம்பந்தப்பட்டவர்களையும் இந்தப் பகுதியில் கலந்துரையாடலில் பங்காளர்களாக அழைக்கிறோம்.

"சுதந்திரமான கருத்துப் பரிமாறல்களுக்கு நிர்பந்தி"

- வசந்தன்.

---

## திசை

ஆசிரியர்: மு.பொன்னம்பலம்

கடந்த ஜனவரி முதல் இப்பத்திரிகை யாழ்ப்பாணத்தில் வெளிவருகிறது. இது "சற்றடே றிவியூவின்" சகோதர பத்திரிகையாக வாரமொரு முறை வெளிவருகிறது.

தொடர்புகளுக்கான முகவரி:
118, 4ம் குறுக்குத் தெரு,
த.பெ. 122,
யாழ்ப்பாணம்.

## தமிழ் வாலிபர் ஒருவர் இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளார்

எபெர்ஸ்பாக் என்னும் இடத்தைச் சேர்ந்த தமிழ் வாலிபர் ஒருவர் அவரது அரசியல் தஞ்சக் கோரிக்கை வழக்கு நிராகரிக்கப்பட்டு இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளார்.

கடந்த நாலு வருடங்களாக ஜெர்மனியில் வசித்து வந்த இவரது அரசியல் தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு இருந்தது. அதனை மறுபரிசீலனைக்கு (அப்பீல்) எடுக்காது கவலையீனமாக இருப்பின், இது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்பாக அமைகிறது. இது பற்றி உங்கள் வழக்கறிஞருடன் கலந்தாலோசிக்குமாறு, அரசியல் தஞ்ச கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களை கேட்டுக் கொள்கிறோம்.

---

## மீண்டும் எச்சரிக்கை?......

அண்மையில் கிட்லரின் நூற்றாண்டு தினத்தை ஒட்டி மேற்கு ஜெர்மனியில் பலத்த பாதுகாப்பு பொலிசாரால் போடப்பட்டிருந்தது. வெளிநாட்டவர் மீது நவநாசிகள் தாக்குதலை மேற்கொள்ளலாம் என்கிற அச்சம் பத்திரிகைகளில் பரவலாக வெளிப்பட்டதன் விளைவே அதும். நவநாசிகள் பலர் பொலிசாரால் கைது செய்யப்பட்டதுடன் இவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

---

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைவரான திரு எம்.சி.எம்.நாகரத்தினம் அவர்கள் கடந்த மார்ச் மாதம் காலமாகி விட்டார். சாதி ஒடுக்குமுறைகளிலிருந்து ஒடுக்கப்பட்ட மக்களை மீட்டெடுக்க பல போராட்டங்களை நடாத்தியவர். இறக்கும் வரை அம்மக்களின் நலன்களுக்காக வாழ்ந்த அத்தோழருக்கு நாம் எமது அஞ்சலிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

-தேனீக்கள்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரீங்காரம்

அன்பானவர்களுக்கு தேனீயின் அன்பான வணக்கங்கள்..

மூன்றாவது ரீங்காரத்தின் வாசலில் நிற்கும் எம்மை வாசகர்களிடமிருந்து வரும் கடிதங்களும், விமர்சனங்களும், ஆக்கங்களும் புதிய உத்வேகத்தைக் கொடுத்து "உனக்கு இப்போ பொறுப்புக்கள் அதிகம்" என்று கூறிவைக்கின்றன..

தொடரும் எமது நகர்வுகளை சிரத்தையுடன் நிகழ்த்துவதற்காக யதார்த்தத்துடன் எம்மை ஆத்மார்த்தமாகப் பிணைத்துக்கொண்டும், விமர்சனங்களுக்கு மதிப்பளித்து, புதுமையான கருத்துக்களைப் பிரசவிக்கும் ரீங்காரங்களாக அமைக்கவேண்டிய எமது கடமையை நாம் கருத்தில் கொள்வோம்.

தரையிலும் நீரிலும் தனது கால்களைப்பதிக்கும் மனிதன் ஆகாயத்தில் பறக்கவும், பின்னர் சந்திரனில் காலடி எடுத்து வைக்குமளவுக்கும் விஞ்ஞானம் இன்று வளர்ச்சியடைந்துவிட்டது.

சோதனைக்கூடத்தில் பெற்றோர்கள் இல்லாமலே குழந்தை பிறந்து விடுகிறது;

மனித மூளையின் வேகத்திலும் விரைவாய்க் கணிக்கும் கருவிகள் காரியங்களைச் சாதிக்கின்றன..

காலநிலையின் மாற்றங்கள் கூட முன்கூட்டியே அறியப்படுகின்றன..

இயற்கையின் காற்று, ஒளி, ஒலி என்பவற்றைக்கூட செயற்கைக் கருவிகளில் சேமிக்கப்பட்டு தேவைக்கேற்பப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்தச் சாதனைகளையெல்லாம் நிகழ்த்துமளவிற்கு விஞ்ஞானத்தின் பரிமாணங்கள் விரிவடைந்துள்ள விஞ்ஞானத்தின் வளர்ச்சியை மனித குலத்தின் வளர்ச்சியென்று சொல்லப்படுகின்றது.

ஆனால்

உலகனைத்திலும் உள்ள மனிதகுலம் முழுவதும் இந்த விஞ்ஞானத்தின் சேவையைப் பெற்றுக்கொள்ளமுடிகிறதா?

விஞ்ஞானம் அறிமுகப்படுத்தும் புதிய புதிய கண்டுபிடிப்புக்களை நுகரக்கூடிய அளவில் மனிதகுலம் "முழுவதும்" இருக்கின்றதா?

நிலைமை அப்படியா இருக்கின்றது?

இல்லையே

இந்தப்பதிலுக்குப்பின் ஏன் என்ற கேள்வியும் எழுகிறது;

ஆம்

மனிதகுலம் வர்க்கரீதியில் இரண்டாக உடைந்துள்ளது.

சுரண்டும் ஆளும் வர்க்கம்.

சுரண்டப்படும் ஆளப்படும் வர்க்கம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வலிமை பெற்றிருக்கும் சுரண்டும் வர்க்கம் விஞ்ஞானத்தின் வளர்ச்சியைத் தனக்குச் சாதகமாக்கி இலாபங்களையும் அனுபவிக்கின்றது. முதலாளித்துவமானது தனது வளர்ச்சியுடன் விஞ்ஞானத்தின் வளர்ச்சியையும் இணைத்துள்ளது. முதலாளித்துவத்தின் வளர்ச்சிதான் விஞ்ஞானத்தின் வளர்ச்சியும்.

அதனுல்தான்

விஞ்ஞானத்தின் தாற்பரியங்களை அனுபவிக்க முடியாத அளவிற்கு சுரண்டப்படும் தொழிலாளவர்க்கம் நிர்ப்பந்திக்கப்படுகின்றது.

அதெப்படி?

தொழிலாளவர்க்கத்தின் வியர்வையால்தான் முதலாளித்துவம் செழிப்படைகிறதென்றால் தனது வளர்ச்சியிலிருந்து கிடைக்கும் பலனை அதனைப் பெற்றுத்தரும் வர்க்கத்திற்கே மறுப்பது எப்படி நியாயமாகும்.

இது எவ்வளவு பெரிய அநீதி

இந்த முதலாளித்துவ அமைப்புமுறையைப் பாருங்கள்!

விஞ்ஞானத்தில் கண்டுபிடிக்கப்படும் ஒவ்வொரு புதிய இயந்திரமும் உழைக்கும் மனிதனுடன் போட்டியிருவதற்காகவே தோற்றுவிக்கப்படுகின்றன.

தொழிற்சாலைகளில் இயங்கும் ஒவ்வொரு இயந்திரமும் தன் வியர்வையை விற்கும் ஒவ்வொரு மனிதனின் கண் முன்னாலேயே அவனது உழைப்பைக் கசக்கிப் பிழிகின்றன.

இயந்திரங்களின் வேகத்திற்குப் போட்டியாக அவனும் இயந்திரமாய்த் தேய்கிறான்.

இவனது தேய்வில் பெருகுவது உற்பத்தி.

பெருகும் உற்பத்தியின் வேகத்தை அதிகரிக்க புதிய புதிய இயந்திரக் கண்டுபிடிப்புகள்,

இக்கண்டுபிடிப்புகள் பலன் தேடித்தருவது அதும் முதலாளிவர்க்கத்திற்குத்தான்.

ஓ இந்த அமைப்பு முறையில் விஞ்ஞானம் கூட சுரண்டப்படும் வர்க்கத்தின் பகைவனுய் அல்லவா இருக்கின்றது.

உற்றுப் பார்த்தால் இந்த அமைப்புமுறையில்

அ பு'

பாசம்

நேர்மை

மனிதமனச்சாட்சி

அடிப்படை மனிதப்பண்புகள் கூடஇல்லை.

"இந்த அமைப்புமுறை நியாயமற்றது. இது ஒட்டுமொத்தமான அழிவைத்தான் தனக்கும் தான் சார்ந்த வர்க்கத்திற்கும் இழைக்கிறது.", என்ற உண்மையை சுரண்டப்படும் தொழிலாளர்வர்க்கம் உணர்ந்து தன்னை அணிதிரட்டிக்கொள்கிறது. "சுரண்டப்படுவோர் அனைவரும் ஒன்றாய்ச் சேர்ந்தால் இவ்வமைப்புமுறையை தூக்கியெறியலாம்." என்ற உணர்வு சக்தியாய் உருவெடுத்த சம்பவங்கள் வரலாற்றில் பல முறை நிகழ்ந்தன்று.

www.tamilarangam.net

இன்று வடகிழக்குப்பகுதிகளில் அடிமட்டத்தொழிலாளர்களின் அடிபடைத்தேவைகளை முன்னிறுத்திப் போராடக்கூடிய தொழிற்சங்கங்களையும் இயங்கமுடியா நிலையிலே வைக்கப்பட்டுள்ளன. இவையோ அல்லது வேறு வெகுஜன ஸ்தாபனங்களோ இயங்கமுடியாத நிலையில் முடியாதவாறு அடிப்படை சுதந்திரங்கள் மறுக்கப்பட்டுள்ளன. அடிமட்டத் தொழிலாளர்களின் அடிப்படைத்தேவைகளினடிப்படையிலும், உரிமைகளினடிப்படையிலும் செயற்படுத்தப்படும் செயற்பாடுகளின்மூலமே அடிமட்டத் தொழிலாளர்களை அணிதிரட்டமுடியும். இவற்றை புறக்கணித்துவிட்டு "தொழிலாளர்களை அணிதிரட்டுவோம்" என்று யாராவது கூறுவார்களாகயிருந்தால் அவர்கள் வெறும் "புத்தகவட்டத்துக்குள்" இருந்தபடி "ஓட்டோமற்றிக் புரட்சி" செய்ய நினைக்கும் "மேதை"களாய்த்தான் இருப்பார்கள். இவர்களின் கோசங்களில் கொஞ்சம்கூட யதார்த்தம் இருக்காது.

இன்று எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின்போது கடைபிடிக்கப்படும் போராக இருந்தால் என்ன? , போர்நிறுத்தமாக இருந்தால் என்ன? மக்களின் நலன்களின் அடிப்படையிலேயே பிரகடனப்படுத்தப்படவேண்டும். இவைகள் சாதாரணமக்களுக்கு தீமைதான் விளைவிக்கின்றனவென்றால் யுத்தமாக இருந்தாலும் நிறுத்தமாக இருந்தாலும் மக்களுக்கு இவற்றால் எந்தவித பிரயோசனமுமில்லை.

ஆளும் அரசுகளின் படைகளுக்கு இந்த நீதிகள் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனால் "மக்களுக்காக போராடுபவர்கள்" இதை கடைப்பிடிக்க வேண்டியது கட்டாயம் தானே.

பொது எதிரியை போர்க்களத்தில், துப்பாக்கிமுனையில் மாத்திரம்தான் சந்திக்க வேண்டுமென்பதில்லை. மலைகளில் உடல்உழைப்பைப் பறிகொடுத்து ஊதியமுமின்றி உறிஞ்சப்படுகையிலும், சம்மாட்டிகளைக் கொழுக்க வைத்து நாள்முழுவதும் உறிஞ்சப்பட்டு இறுதியில் மிஞ்சும் சொற்ப சல்லியில் விலைவாசியை விரக்தியோடு எதிர்கொள்கையிலும், எட்டுமணிநேரமும் தொழிற்சாலைஇயந்திரமாய் அன்றும் பொது எதிரியைத்தான் சந்திக்கிறார்கள். எந்தவித தயாரிப்புகளுமின்றி. இந்த பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பொது எதிரி துவக்கை மாத்திரம் வைத்துக்கொண்டு எம்மை அடக்குவதில்லை. எனவே எதிரியை அவன் வியாபித்திருக்கும் அனைத்து மட்டங்களிலும் முன்னெடுக்கப்படும் போராட்டங்களினூடாகவே எதிர்கொள்ளவேண்டும். போர்க்களமும் பொது எதிரியைச் சந்திக்கும் "ஒரு" இடம்தான். ஆனால் "ஒரே"இடமல்ல. துப்பாக்கியும் அவனை எதிர்கொள்ளும் ஆயுதம் தான், ஆனால் துப்பாக்கியால் "மட்டுமே" அதைச்செய்யமுடியாது. எதிரி இருப்பது போர்க்களத்தில் மாத்திரம் தான் வேறெங்கும் அவன் இல்லை என்று நினைத்ததால் தான் போர்க்களத்தில் நின்ற சக நண்பனும் எதிரியாகத் தெரிந்தான்.

இன்றுள்ள நிலைமையில் அடிப்படை ஜனநாயக உரிமைகளை நிலை நிறுத்துவதிலும் சாதாரண மக்களின் கருத்துச்சுதந்திரம், அடிபடைஉரிமைகள், பல்வேறு கருத்துக்களையும் சுதந்திரமாகத் தெரிவிப்பதற்காக ஜனநாயகச்சூழலை நிறுத்துதல் போன்ற பணிகளைச் செய்வதன்மூலம் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட சக்திகள் தமது போராட்ட முன்னெடுப்புக்களை மக்கள் மத்தியில் செயற்படுத்தும் நடவடிக்கைகளாக அமையவேண்டும். மக்களின் தேவைகளினடிப்படையில் அமையும் செயற்பாடுகளே போராட்டங்களை முன்னேற்றப்பாதையிலிட்டுச் செல்லும்.

இந்தவகையில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு, சமாதானப்பேச்சுக்களில் கலந்து கொண்டுள்ளது. கலந்து கொண்டதை வரவேற்கவேண்டும். இந்தப்பேச்சுக்கள் வெறுமனே இலங்கை அரசுடனே, இந்திய அரசுடனோ மட்டும் அமைந்து விடாமல் சகல அமைப்புக்களுடனும் பேசுவதன் மூலம் இணைந்து செயற்படுவதன்மூலமே சரியான திசையை நோக்கிய அணுகுமுறைகளாக அமையும்

தேனீக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உழைப்பாளர் தினம்

மேதினம் என்பது பற்றி எம்மில் பெரும்பாலானோருக்கு விளக்கம் இல்லை என்பது மட்டுமல்ல, ஊர்வலத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்கிற அக்கறையும் இல்லை. விடுமுறை நாளாக அதைக் கழித்து வீட்டில் ஓய்வாகஇருந்து விடுகிறார்கள். வருடாவருடம் எம்மில் குறிப்பிட்ட சிலர் மட்டுமே மேதின ஊர்வலத்தில் கலந்து கொள்வதை காணக் கூடியதாகவுள்ளது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இத்தினமானது, இன்று ஒவ்வொரு தொழிலாளியும் அனுபவிக்கும் எட்டு மணித்தியால வேலை, எட்டு மணித்தியால பொழுதுபோக்கு, எட்டு மணித்தியால ஓய்வு என இருப்பதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. நூற்றி ஐந்து வருடங்களுக்கு முன்னால் இப்போராட்டத்திற்காக எத்தனை தொழிலாளர் தமது இரத்தத்தை சிந்தினார்கள், எத்தனை பேர் பலியானார்கள். இதை நினைவு கூருமுகமாகவும், உலக முதலாளித்துவத்திற்கெதிரான தமது எழுச்சியைக் காட்டுவதற்கும் சர்வதேச ரீதியாக தொழிலாளர்கள் இம்மேதின ஊர்வலத்தை நடாத்துகிறார்கள்.

18ம் நூற்றாண்டின் நடுப்பகுதிகளில் தொழிலாளர்கள் பத்து மணித்தியாலத்திற்கதிகமாக தொழிற்சாலைகளில் வேலை செய்ய வேண்டியிருந்தது. இப்போது தொழிலாளர்கள் அனுபவிக்கும் உரிமைகள் கூட அப்போது அவர்கள் பெற்றிருக்கவில்லை. இதனால் நாடெங்கும் தொழிற்சங்கங்களமைத்து தமது உரிமைகளுக்காக போராடத் தொடங்கினார்கள். 1845களில் இச் சங்கங்கள் பத்து மணித்தியாலக் கோரிக்கையை முன் வைத்து போராட்டத்தில் இறங்கின. இங்கிலாந்து தொழிலாள வர்க்கம் நடாத்திய போராட்டம் 1848ல் மே மாதம் பத்து மணித்தியால கோரிக்கைக்கான சட்டத்தை அமுலுக்கு கொண்டு வந்தது. இதை எதிர்த்து முதலாளிகள் தீவிரமாக பிரச்சாரம் செய்தனர். இதற்காக முதலாளிகளின் நலன்களுக்காக இயங்கும் பொது அமைப்புக்கள் யாவும் பிரச்சாரங்களில் ஈடுபடுத்தப்பட்டதன் விளைவு 1850ல் இங்கிலாந்து உயர் நீதிமன்றத்தால் இச்சட்டம் ரத்துச் செய்யப்பட்டது.

இதே காலகட்டத்தில்தான் அமெரிக்காவில் உள்ள சிக்காக்கோ நகரில் எட்டு மணித்தியாலக் கோரிக்கை எழுச்சி பெறத் தொடங்கியிருந்தது. நாடெங்கிலும் இக்கோரிக்கைக்கான கோஷங்கள் தொழிலாளர்களினால் முன்வைக்கப்பட்டன. தொழிலாளர்களது ஐக்கியமும், எட்டு மணித்தியாலக் கோரிக்கையும் வலுப்பெறத் தொடங்கியதைக் கண்டு, 1867ல் ஆறு மாநில அரசுகள் இக்கோரிக்கையை ஏற்று சட்டங்களியற்றின. 1868ல் அமெரிக்க நாடாளுமன்றம் எட்டு மணித்தியாலக் கோரிக்கையை ஏற்று, இதற்கான சட்டத்தை அமுல் படுத்தியது. ஆனால் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜெஸ்டர் ஏ ஆதர் இதனை ஏற்கமறுத்து நிராகரித்து விட்டார்.

இந்த நடவடிக்கையானது தொழிலாளர்களின் எழுச்சிக்கு காரணமாக அமைந்து விட்டது. மீண்டும் போராட்டங்கள் வலுப்பெற்றன. ராணுவம் தொழிலாளர்கள் மேல் கட்டவிழ்த்து விடப்படுகிறது. தொழிலாளர் சிலர் கொல்லப்படுகிறார்கள். அரசபடையினரின் கட்டவிழ்ப்பு போராட்டங்களை ஒடுக்கி விடுகின்றன. இருந்தும் 1884ல் தொழிலாளர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிளா சிக்கக்கோவில் மாநாடு ஒன்றை ஏற்படுத்தி மே முதலாம் திகதி எட்டு மணித்தியாலக் கோரிக்கைக்கான தீர்மானத்தை நிறைவேற்றுகிறார்கள். இதன்படி 1886ம் ஆண்டு மே முதலாம் திகதி அன்றிலிருந்து தொழிற்சாலைகளில் எட்டு மணித்தியாலம் மட்டும் வேலை செய்வதாக உறுதி கொள்கிறார்கள். முதலாளித்துவம் இந்த போராட்டத்தை நசுக்க மீண்டும் அரசபடைகளை தயாராக்கிறது. ஆறும் ஆறு லட்சம் தொழிலாளர்கள் எட்டு மணித்தியாலம் மட்டுமே தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள். இது அடுத்தடுத்த நாட்களிலும் தொடரவே தொழிலாளர்கள் தாக்கப்படுகிறார்கள். இப் போராட்டத்தை முன்னெடுத்த எட்டு தலைவர்கள் அரசாங்கத்தினால் கைது செய்யப்படுகிறார்கள். நீதி மன்ற விசாரணையின் பின் இவர்களுக்கு தூக்குத்தண்டனை வழங்கப்படுகிறது. இது தொழிலாளர்களிடையே தீவிரத்தை அதிகப்படுத்துகிறது, போராட்டங்கள் நாடு முழுவதும் மேற் கொள்ளப்படுகின்றன. இதைக்கண்டு பயந்த அரசாங்கம்எட்டுப் பேரில் இருவருக்கு ஆயுள் தண்டனையாகக் குறைக்கின்றது. ஏனையோர் தூக்கிலிடப்படுகிறார்கள். தலைவர்களுக்கு வழங்கப்பட்ட தூக்குத்தண்டனையானது தொழிலாளர்களின் எழுச்சியை வலுப்படுத்துகிறது. 1889ல் எங்கல்ஸ் தலைமையில் கூடிய பல நாடுகளின் சோசலிச அமைப்புகளின் தலைவர்கள் இரண்டாம் அகிலத்தை உருவாக்கினார்கள். இந்த மாநாட்டில் மே முதலாம் திகதியை சர்வதேச தொழிலாளர் தினமாக பிரகடனம் செய்யப்படுகிறது. எட்டு மணித்தியாலப்போராட்டம் உலகம் முழுவதும் நடைபெற வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

இன்றைக்கு நிலவி வரும் எட்டு மணித்தியால வேலை நேரம் எத்தனையோ தொழிலாளரின் தியாகங்களினாலும், சிந்தப்பட்ட இரத்தங்களினாலும் கிடைக்கப் பெற்றது. வருடாவருடம் இடம் பெறும் மே தின ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் தொழிலாளர்கள் இதனை நினைவு கூருவது மட்டுமல்ல முதலாளித்துவத்திற்கெதிரான போராட்டத்தின் அழைப்பாகவும் இது அமைகின்றது. இன்றைக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் ஏழு மணித்தியாலத்திற்கான கோரிக்கை வலுவடைந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. மேதினத்தில் கலந்து கொள்பவர்கள் இக்கோரிக்கையை முன்னெடுத்துச் செல்லும் தொழிலாளர்களின் எழுச்சியைக் கண்டு கொள்ளலாம்.

நமது நாட்டைப் பொறுத்தவரை அரச நிறுவனங்கள் தவிர்த்து ஏனைய நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் எட்டு மணித்தியாலவேலையை இன்னமும் முழுமையாக பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் இல்லை. முதலாளிகளின் கொடுமையான சுரண்டலகளில் இருந்து விடுபடாத நிலையிலேயே இன்னமும் உள்ளார்கள் இந்த நிலமைகளில் இருந்து விடுபடுவதற்கான போராட்டங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல. அதற்கான தயாரிப்புக்களும் நடைபெற வேண்டும். மே தின ஊர்வலங்கள் இதற்கு முன்னோடியாக விளங்குவதால் அதில் பங்கு கொள்வது ஒவ்வொருவருடைய கடமையாகும். இதை விடுத்து மே தினமென்றால் விடுமுறை தினமென்று வீட்டில் ஓய்வாக இருப்பதுதான் என்றில்லை.

-ஆதவன்-

---

நமது உரிமைகளுக்காக போராடும் ஆசையால் ஒன்றுதிரண்டு ஒருவரோடு ஒருவர் பிணைந்து நின்று நாமெல்லாம் நண்பர்கள் என்ற உண்மையை உணர்ந்தாலன்றி, நமது வாழ்வை நாம் போராடிப் பெற முடியாது.

-காக்கி-

---

www.tamilarangam.net

# தமிழகம் பண்பாடு

தமிழ் நாட்டு மக்களைப் பொறுத்தவரை தி.மு.கவும் அ.தி.மு.கவும், இந்திரா காங்கிரசும் மாறி மாறி போராட்டங்களை நடாத்தி தங்கள் பலத்தை பலதடவை நிரூபித்து வந்தது பற்றி தினசரிகளில் மறியல்போராட்டம், ஆர்ப்பாட்ட ஊர்வலம், பேரணி என்றெல்லாம் செய்திகளாக அறிந்த ஒன்று. தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கோ அல்லது அந்நாளைய அபிவிருத்தி திட்டங்களிலோ கவனமெடுக்காது, அரசியல் வாதிகளின் ஊழல்களையும், அரச அதிகாரிகளின் ஊழல்களையும் வளர்த்து விட்டு அதை ஒரு அரசியல் பிழைப்பாக நடாத்தி வந்த இக்கட்சிகள் மாறி, மாறி ஒருவரோடு ஒருவர் கூட்டணி அமைப்பதும், பின்னர் உடைத்துக் கொள்வதும் தமிழ் நாட்டின் அரசியலுக்குரிய நியதியே. தமிழ், தமிழ் என்றும், தமிழர் பண்பாடு, கலாச்சாரமென்றும் தாங்கள் அதை கட்டிக்காப்போம் என்றும் மேடைகளிலும், பத்திரிகைகளிலும் முழங்கித் திரியும் தி.மு.கவும், அ.தி.மு.கவும் அண்மையில் சட்டசபையில் மோதியதைத் தொடர்ந்து தமிழர் பண்பாடு தலை குனிந்து நிற்கிறது.

சட்டசபையில் இதற்கு முன்பும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன, இம்முறை இடம்பெற்ற சம்பவம் அனைத்து தமிழக மக்களையும் தலைகுனிய வைத்துள்ளது. அண்மையில் பதவிக்கு வந்த தி.மு.க; கடந்த மார்ச்25ம் திகதியன்று சட்டசபையில் பட்ஜட்டை சமர்ப்பிப்பதாக இருந்தது. இதன்படி முதல்வர் கருணாநிதி சபையில் பட்ஜட்டை சட்டசபையில் 25ந் திகதியன்று வாசிக்க முற்பட்டபோது எதிர்க்கட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அதை தடுத்து உரிமைப் பிரச்சினை பற்றிய விவாதத்தை நடத்த கேட்டிருக்கிறார். இந்த உரிமைப்பிரச்சினை பற்றிய விவாதம் முதல்வருக்கெதிராகவும், பொலிசாருக்கெதிராகவும் அமைந்திருந்தது. ஆனால் முதல்வர் அதனை சட்டை செய்யாமல் பட்ஜட்டை வாசிக்கத் தொடங்கினார். அ.தி.மு.கவினர் அதனை எதிர்க்க ரகளை ஆரம்பமாகியது. ஜெயலலிதாவை முதல்வர் கருணாநிதி தரக்குறைவாகப் பேசியதை தொடர்ந்து தி.மு.கவைச் சேர்ந்த அமைச்சர்கள் சிலரும், எம்எல் ஏக்களும், அ.தி.மு.கவைச் சேர்ந்த எம்.எல்.ஏக்களும் மோதிக் கொண்டனர். இதில் வெட்கக் கேடான விடயம் என்னவென்றால் அமைச்சர் துரைமுருகன் ஜெயலலிதாவின் சேலையை பிடித்திழுக்க முற்பட்டது தான். செருப்புகளும், பேப்பர் கற்றைகளும் ஒருவர் மீதொருவருக்கு வீசப்பட்டன. சட்டசபையில் தமிழ்ப்பண்பாடு இவர்களால்........?

முதல்வர் எதிரில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகள் பத்திரிகைகளில் புகைப்படங்களாக வெளியிடப்படுவது தடைசெய்யப்பட்டது. தொலைக்காட்சியில் வெளியாகாமல் தணிக்கை செய்யப்பட்டன. கடந்த சட்டசபைத்தேர்தலில் தி.மு.க ஆளும் கட்சியாக வெற்றி பெற்றதும்; அ.தி.மு.கவின் தேர்தல் தோல்வி தவிர்க்க முடியாத வகையில் அமைந்ததும் அரசியல் அவதானிகள் முன்பு எதிர்பார்த்ததே. எம்ஜிஆர் மறைவினால் இரண்டாகிப் போன அ.தி.மு.க தேர்தலில் அடைந்த தோல்வியினால், ஏற்பட்ட பாதிப்பு அடுத்து நடைபெற இருந்த இடைத்தேர்தலில் ஒன்றுபட்டு வெற்றி பெற்றது கண்டு தி.மு.கவிற்கு பயத்தை உண்டு பண்ணியது எனலாம். இந்த நிலையில் அ.தி.மு.க, இந்திரா காங்கிரசுடன் கூட்டு ஒன்றை ஏற்படுத்தினால் அது தனது ஆட்சிக்கு பாதகமாக அமைந்து விடும் என்பதில் தி.மு.க கவலை கொண்டிருந்தது. இதன் தாக்கம்தான் அ.தி.மு.க மீதான தாக்குதல் நடைபெறக் காரணமாக இருந்தது எனக் கூறப்படுகிறது.

மக்களின் நலன்களை எந்த விதத்திலும் அக்கறை கொள்ளாதிருக்கும் இக்கட்சிகளும், அரசியல்வாதிகளும் தமது லாபங்களுக்காக கூட்டு சேர்வதும், கட்சி மாறுவதும் அடிக்கடி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஈழத்தமிழர் பிரச்சினைகளில் அக்கறை காட்டுவதும், இலங்கைக்கு போனேன் வந்தேன் என்றெல்லாம் அரசியல் "ஸ்டண்ட்" அடிப்பதும், அடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

...ஈழப்பிரச்சினையில் தமது நிலைப்பாட்டில் ஒத்தக்கர
...அடிப்பதும் அவர்களின் அரசியல் லாபம் கருதியே
...வெளிறுயில்லை. தமிழ்நாட்டு மக்களும் தொடர்ந்து
...வர்களையே தலைவர்களாக தெரிந்தெடுப்பதும் . அவ்...
...தது அரசியல் வறுமையே. இந்த நிலை மாறாது இருக்கும்
...வரை தமிழ் நாட்டு மக்கள் இவர்களால தொடர்ந்து
மாற்றப்படுவதை தவிர்க்க முடியாததே.

— கங்கை-

இந்த மாதம் முதல் தேனீப் பத்திரிகையின் முகவரி கீழ்க் காணும் இட த்திற்கு மாற்றப் பட்டுள்ளது என்பதை அறி யத் தருகிறோம்.

Thenee
see STR. 55
7144 AsperG
WEST. Germany.




தேனீ

இரு மாதங்களுக்கொரு முறை வெளி வருகிறது.

ஆசிரியர் குழு
தேனீக்கள்

தனி இதழ்
3. டி. எம்

வருடச் சந்தா
20. டி. எம்

படைப்புகள், சந்தா முதலிய அனைத்து தொடர்புகளுக்கும்

Thenee
C/o kangatharan
See STr. 55
7144 AsperG
WEST. Germany

நன்றி "துக்ளக்"

www.tamilarangam.net

யாழ். அரசாங்க அதிபர் பஞ்சலிங்கம் சுட்டுக் கொலை!

'ஈழமுரசு' அமிர்தலிங்கம்

யாழ்நகரில் சுட்டுக்கொலை

திருமலையில் ஈரோஸ் 'நா

யாழ். காங்கிரஸ் இவ்ஞானம் சுட்டுக் கொ

# படுகொலைகள் நிறுத்தப்படுமா?....

ஐ. ம. வி. மு. உறு

யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொலை

யாழ்நகரில் சுட்டுக்கொலை

நவசமசமாஜக் கட்சியின் வடபகுதி அமைப்பாளர் அண்ணாமலை சுட்டுக் கொ

சித்தார்த்த

(எஸ்.என்.பிள்ளை) சித்த ஆயுள்வேத வைத்தியசாலையை சேர்ந்த டாக்டர் விஜேந்திரன் (43 வயது) நேற்று காலை 11 மணியளவில் யாழ் புஷ்பலிங்கம் என்ற

துக் கல்லூரி மு தெரியாத நபர்க டுக் கொல்லப் இ போ

ஈழ விடுதலைப் போராட்டத்துடன் சேர்ந்தே பிரவசமான படுகொலைச்சம்பவங்கள் இன்னும் ஓய்ந்தபாடில்லை. நாளாந்தம் யாராவது ஒருவர் கொல்லப்பட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். சமூக விரோதிகள், தேசத்துரோகிகள், என்று ஆரம்ப காலங்களில் நியாயப்படுத்தப்பட்ட இப்படு கொலைகள், நாளடைவில் இயக்கப் போராளிகள், பொதுமக்கள் என்று பரிணமம் அடைந்ததை நாம் மறுப்பதற்கில்லை. உரிமை கோரப்பட்ட, உரிமை கோரப்படாத இப்படுகொலைச் சம்பவங்கள் இன்னும் ஏன் தொடர்ந்து கொண்டிருக்கின்றன? இவற்றிற்கான நோக்கமென்ன?. இவற்றை எப்படி தடுக்கமுடியும்?. இவை எம்முன் உள்ள கேள்விகளாகும்.

விடுதலை அமைப்புக்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இக்கொலை நடவடிக்கைகள், விடுதலைப்போராட்டத்தை நியாயப் படுத்தி தொடர்ந்து கொண்டிருந்தன என்பதை யாவரும் மறுக்கமுடியாது. ஏற்றுக் கொண்டாலென்ன, ஏற்றுக் கொள்ளாவிட்டாலென்ன கொலைக்கான நியாய அறிக்கைகள் வெளி வந்து கொண்டிருந்தன. மக்களின் ங்கள் துப்பாக்கிகளால் கட்டப்பட்ட நிலையில், அவர்க ருத்த கருத்துக்கள் வெளிவராத நிலையில், அவர்கள் சோரனை செய்யப்படாத முறையில் அரங்கேறிய இந்ந டிக்கைகள், பழி வாங்கல் என்று பலரையும், மாணவ ரச அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் என்று சமூ றிவு ஜீவிகளையும் கொன்று குவித்துக் கொண்டிருக்கின்ற

துப்பாக்கிகள் வைத் தால் கொலைகள் எதனையும் நியாயப்படுத்தலாம் என் ன்னிச்சையான போக்கும், மனசாட்சியை அடகு வைத் து கொலையை நியாயப்படுத்த பலர் எம்மில் இருக்கு போதும் இப்படுகொலைச்சம்பவங்கள் குறையப்போவ காலத்திற்கேற்ப வெளியிடப்படும் நியாயப்படுத்தல்கள் யுள் வன்துரோகத்தனத்தால் வெளிவருபவையே. விடு போராட்டத்தின் பின்னடைவால் பிளவுண்டு போனவர்க செய்யப்படும் இந்நடவடிக்கைகள் இனியும் தொடர்வது சார்ந்த இனத்தின் அழிவிற்கே என்பதை உணராமல், ன் இவற்றை தடுத்து நிறுத்த யாராலும் முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நெஞ்சு பொறுக்குதில்லையே..,

எமது நாட்டிலிருந்து பல்லாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள அன்னிய நாடுகளில் பல இலங்கைத்தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆரம்பத்திலிருந்து எமது கலை, இலக்கியத்திற்காகவும், எமது நாட்டின் நிலைமைகளை இங்கு தெரியப்படுத்தவும் பல்வேறு முயற்சிகளைக் குறைந்த பேராவது செய்துகொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக தமிழ் மொழியில் எமது நாட்டின் நிலைமைகளைப் பிரதிபலிக்கும் கதை, கவிதை, கட்டுரைகள், இலக்கியக்கட்டுரைகள், செய்திகள் போன்றவற்றுடன் பல சஞ்சிகைகள் வெளிவந்துக் கொண்டிருக்கின்றன. ஒரு வித்தியாசமான சூழ்நிலையில் வாழும்மக்களுக்கு இம்முயற்சிகள் பயனளிக்கின்றன. மற்றைய நாடுகளைவிட மேற்குஜேர்மனியிலிருந்து தான் கூடியளவு சஞ்சிகைகள் வெளிவருகின்றன. சமீபகாலத்திலிருந்து இச்சஞ்சிகைகளின் ஆசிரியர்கள், ஆக்கதாரர்கள், வாசகர்கள் ஒன்றாகச் சந்திக்கும் முகமாக இலக்கியச்சந்திப்புக்கள் நடைபெற்றுவருகின்றன. இச்சந்திப்புக்களில் பல விதமான கருத்துக்கள் பரிமாறப்பட்டு வளர்ச்சியடைந்து வருகின்றது. ஆனால் இச்சந்திப்புக்களில் ஒரே முகங்களைத்தான் சந்திக்க கூடியதாகவிருப்பது மனவேதனையைக் கொடுக்கின்றது. இங்கு வருபவர்களுக்கு மட்டும்தான் இலக்கியத்தில் ஆர்வமிருக்கின்றது என எண்ணத்தோன்றுகின்றது. சிலருக்கு பிரயாண வசதி, விடுமுறைவசதி ஆகிய காரணங்களும் அடங்குகின்றன. இங்கு வெளியாகிக் கொண்டிருக்கும் சஞ்சிகைகளைப் பார்த்தால் அங்கு ஒரு குறிப்பிட்ட சிலர் மட்டுமே ஆக்கங்களையும், விமர்சனங்களையும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இச்சஞ்சிகைகள் யாவும் பல சிரமங்களுக்கிடையில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்நிய நாட்டிற்கு வந்தாலும் ஒரு சிலர் மட்டுமே இலக்கியத்தினை வளர்ப்பதற்கு ஆர்வம் காட்டி வருகிறார்கள். இவர்களை தட்டிக் கொடுத்து ஊக்கமளிக்க யாரும் முன்வருவதில்லை. ஒரு ஆக்கத்தை விமர்சிப்பதன் மூலம் அதன் ஆக்கதாரரை இன்னும் ஊக்குவிக்க கூடியதாக இருக்கும். தவறுகளைச் சுட்டிக் காட்டி ஆக்கதாரரை இன்னும் வளர வழி செய்யலாம். இங்கு சில சஞ்சிகைகளுக்கு வாசகர் குறைவாக இருப்பது மட்டுமல்ல எழுத்தாளர்களும் குறைவாகத்தான் இருக்கின்றன. மேற்கு ஜேர்மனியில் வெளியாகும் பத்திற்கு மேற்பட்ட சஞ்சிகைகள் வேறுவேறு நகரங்களிலிருந்து வெளி வருகின்றன. சில பத்திரிகைகள் இடையில் நின்று விட்டன. அதிகமான பத்திரிகைகள் பொருளாதார காரணங்களால் இடையில் நின்று விட்டன. சில பத்திரிகைகள்சமூக உதவி நிறுவனங்களின் உதவியோடு வெளி வந்தாலும், அதிகமாக எல்லா பத்திரிகைகளுக்கும் பொருளாதாரம் தான் பிரச்சனையாகவுள்ளது. தபாற்செலவே பெரும் பகுதியை எடுக்கின்றது. இங்கு எவரும் இலாபம் கருதி பத்திரிகைகளை வெளியிடுவதில்லை. எந்த பத்திரிகையை எடுத்துக்கொண்டாலும் அதன் சந்தாக்காரர்களும் ஒரு குறிப்பிட்டவர்களாகத்தான் இருக்கின்றார்கள். அதிகமானவர்கள் எந்தவொரு புத்தகத்தையும் விலை கொடுத்து வேண்டிப் படிக்கவே தயங்குகின்றார்கள். தமிழர்களின் முயற்சிக்கே இவர்கள் தடையாக நிற்கின்றார்கள். பெரும்பாலானவர்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பேசும்படம், பொம்மை, சித்திரா போன்ற சஞ்சிகைகளை விரும்பிப் படிக்கின்றார்கள். இப்படியான புத்தகங்களை தேடிக்கண்டுபிடித்து வேண்டிப் படிக்கின்றார்கள். சிலர் அப்புத்தகங்களுக்கு சந்தாக்கட்டியிருக்கின்றார்கள். ஆனால் இவர்களில் எவராவது இலங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கையிலிருந்து வெளியாகும் எந்தவொரு சஞ்சிகைக்கும் சந்தாக்கட்டியிருக்கமாட்டார்கள். இங்கு வெளியாகும் எந்தவொரு சஞ்சிகையை எடுத்துக் கொண்டாலும் இவர்கள் வேண்டும் இந்திய சினிமாப் புத்தகங்களின் விலையைவிட அரைமடங்குதானிருக்கும். ஆனால் இந்தப் புத்தகங்களுக்கு சந்தா செலுத்த தயங்குகின்றார்கள். தாம் வெளியிட்ட புத்தகங்களுக்கு சந்தா கிடைக்காததினால் அவர்களால் தொடர்ந்து அச்சடிக்க முடிவதில்லை. சில நாவல்களும், கவிதைத்தொகுப்புக்களும், வெளிவந்திருக்கின்றன. இவற்றை வேண்டிப் படிப்பவர்களின் தொகையும் குறையாகவே காணப்படுகின்றது. இவற்றை படித்து விமர்சிப்பதன் மூலம் அந்த எழுத்தாளர்களின் முயற்சியை ஊக்குவிக்க தவறுகின்றார்கள். இவர்களின் புத்தகங்கள் விற்கப்படாமல் தேங்கிநிற்கின்றன. இங்கு வெளியாகும் சில கதை, கவிதை, கட்டுரைகளில் எமது நாட்டின் நிலைமைகள், சமுதாயச்சீர்கேடுகள் பிரதிபலிக்கின்றன. நமது அன்றாட வாழ்வில் நிகழும் நிகழ்ச்சிகளையும், அவற்றிற்கான தீர்வுகளையும் அடிப்படையில் கொண்டு எழுதப்படும் ஆக்கங்களை படிக்க விரும்பாமல் தங்களுக்கு சம்பந்தமில்லாத நடிகர், நடிகைகளின் விபரங்களை அறிவதில் கவனமாக இருக்கின்றார்கள். இவர்கள் யதார்த்தத்திலிருந்து விலகி நின்று கனவுலகில் வாழவே விரும்புகின்றனர் முற்போக்கான ஆக்கங்களை புறக்கணிப்பதால் இந்த எழுத்தாளர்கள் எழுதாமல் விடுவார்கள் என்ற அபிப்பிராயத்தை வைத்திருக்கின்றார்கள்.

இலங்கையிலும் சரி, மேற்கு ஜேர்மனியிலும் சரி பத்திரிகைகளை வெளியிடுவோரை குறை கூறும் பழக்கம் பலரில் காணப்படுகின்றது. நாம் கடக்கும் ஒவ்வொருகாலத்தையும் அறியக்கூடியதாகவிருப்பது இந்த சஞ்சிகைகள் தான். ஆனால் இந்த முயற்சிக்கு ஆதரவு குறைவாகவே காணப்படுகின்றது. இந்தியாவிலிருந்து வரும் புத்தகங்களை வேண்டிப் படிக்கக்கூடாது என்று தடுக்க எவருக்கும் உரிமையில்லை. ஆனால் இங்கு வாழும் தமிழர்கள் இங்கிருந்து வெளியாகும் சஞ்சிகைகளுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும். ஒரு வருட சந்தா என்பது ஒரு பெரிய தொகையல்ல. நீங்கள் இந்திய சினிமாப்புத்தகங்களுக்கு ஒரு தடவையில் செலுத்தும் தொகையாகவேயுள்ளது. நீங்கள் இவ்வாறு கவனக்குறைவாக இருந்தால் தொடர்ந்தும் இலக்கிய முயற்சிகளை செய்ய இயலாமல் போய்விடும். உங்கள் பங்களிப்பினால் நீங்கள் புதிய எழுத்தாளர்களையும், சஞ்சிகைகளையும் உருவாக்கலாம். கனவுலகை பிரதிபலிக்கும் எழுத்தாளர்களை வளர்ப்பதல்ல எமது நோக்கம். யதார்த்தத்தை பிரதிபலிக்கும் எழுத்தாளர்களையும், சமூகமாற்றத்திற்காக எழுதும் எழுத்தாளர்களையும் வளர்ப்பது தான் எமது நோக்கம். இவர்களை வரவேற்பதுதான் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

உஷாக்கனி

## செய்திகள்

இன்று முதல் மூன்று நாட்களுக்கு

### யாழ்.பல்கலைக் கழகமாணவர்கள் அடையாள உண்ணாவிரதம்

(யாழ்.அலுவலக நிருபர்)

யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் இன்று புதன் கிழமை முதல் மூன்று நாட்களுக்கு அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுப வதென்று முடிவு செய்துள்ளனர். ஆயுதம் ஏந்திய குழுக்களினதும் அமைதிப் படையினரதும் கெடுபிடிகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதைத் தொடர்ந்தே இந்த முடிவை எடுத்துள்ளனர்.

கடந்த திங்கட் கிழமை இரவு 7 மணியளவில் யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து வீடு திரும்பிய என். பிரபாகரன் என்ற கலைப்பட்ட மாணவன் கோண்டாவிலில் வைத்து அமைதிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதேவேளை வேறு சில மாணவர்கள் அமைதிப் படையினரால் கைதாகினர். இதுபோன்ற நடவடிக்கைகளைக் கண்டித்தே அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபட முடிவாகியுள்ளது.

இதேவேளை கோண்டாவில் டெலோ தலைமையகம் கடந்த 29ஆம் திகதி முதல் இயங்கத் தொடங்கியுள்ளது. ஆயுதம் எதுவுமின்றி இந்த முகாம் இயங்குகிறது. இந்திய அமைதிப் படையுடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து முகாம் இயங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது இவ்வாறிருக்க டெலோ யாழ். பிராந்திய பொறுப்பாளர் திரு. செந்தோழன் விடுத்த அறிக்கையொன்றில், யாழ். அரச அதிபர் பஞ்சலிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்துள்ளார். இந்தியப் படையுடன் நடத்திய பேச்சுவார்த்தையினைத் தொடர்ந்தே இப்போது தலைமையகம் இயங்குகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

நன்றி வீரகேசரி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கியச் சந்திப்பு

18.03.89 அன்று இலக்கியச் சந்திப்பின் மூன்றாவது நிகழ்ச்சி நொய்ஸ் நகரில் நடைபெற்றது. சுமார் 60 பேர் வரை கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில் 'சிந்தனை', 'தூண்டில்', 'புதுமை', 'ஏலையா' 'வெகுஜனம்', 'தேனீ', ஆகிய சஞ்சிகைகள் கலந்து கொண்டன. காலை பத்து மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்ச்சியில் செயற்குழு சார்பாக திரு கிருபானந்தன் ஆரம்ப உரை நிகழ்த்தினார். விமர்சன அறிக்கையை வாசித்த திரு. லோகன் இலக்கிய சந்திப்பிற்கு நிரந்தர குழு ஒன்று அவசியம் என குறிப்பிட்டார். இதன்பின் வாசகர்களின் சுயஅறிமுகமும், சஞ்சிகைகளின் ஆசிரியர் கருத்துக்களும் இடம் பெற்றன. வாசகர் கருத்துகளின் போது இடம்பெற்ற கருத்துக்கள்.

"அனைவராலும் பொதுவான சஞ்சிகை வெளியிடப்படவேண்டும்".

"பத்திரிகைகள் சில தங்கள் கருத்துக்களை வாசகர் மீது திணிக்கின்றன, அத்துடன் செய்திகள் நடுநிலைமையாக இருக்கவேண்டும்".

"ஈழத்துச்செய்திகள் மட்டும் எழுதாமல் இங்குள்ளவர்கள் பற்றிய செய்திகள், அவர்களுடைய பிரச்சினைகளையும் எழுதப்படவேண்டும்".

"சில பத்திரிகைகள் இழிவாக எழுதுவதை நிறுத்தவேண்டும்" (எந்தப் பத்திரிகை என்று வாசகர் குறிப்பிடவில்லை).

"உங்களுக்கு கிடைத்திருக்கும் கருத்துச் சுதந்திரம் நமது மண்ணில் பறிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள பத்திரிகைகள் இதனை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்".

இவற்றில் சிலவற்றிற்கு அவ்வப்போது பதில் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன. 'பத்திரிகை ஒன்றை பொதுவாக வெளியிடுவது சாத்தியப்படாது என்றும்', வித்தியாசமான கருத்துக்கள் ஒவ்வொருவரிடமும் இருப்பதால்தான் பத்திரிகைகளும் வெவ்வேறாக வெளிவருகின்றன என்றும்', இழிவாக எழுதும் பத்திரிகைகள் எது என்று வாசகர் கூறமுடியாத அளவிற்கு அராஜகம் ஏதாவது நிகழ்ந்ததா? என்றும் பதில் கருத்துக்களும் இடம்பெற்றன.

சிந்தனை ஆசிரியரின் வேண்டுகோளுக்கிணங்க பெண் விடுதலை பற்றி வாசகர்களும் சஞ்சிகை ஆசிரியர்களும் தமது கருத்துக்களை தெரிவித்தனர். இதில் பெண்விடுதலை பற்றிய கருத்துக்களை பெண்களே முதலில் பேசவேண்டுமென்றும் கேட்கப்பட்டது. இதில் பெண்கள் பேச முனைந்தது வரவேற்கத்தக்க விடயமாக இருந்ததுடன் வித்தியாசமாகவும், எடுத்துக்காட்டாகவும் அமைந்தது.

பெண்கள் பற்றிய விவாதத்தின் போது இடம்பெற்றவை.

"பெண்களுக்கு புறரீதியான விடுதலை பெறவேண்டுமாயின் அகரீதியாக அவர்கள் விடுதலை பெறவேண்டும்.

"பெண்விடுதலை பற்றி பேசுபவர்கள் நடைமுறையில் அப்படி நடந்து கொள்வதில்லை.

"வீட்டில் எல்லா வேலைகளையும் பெண்களே செய்து கொள்கிறார்கள், ஆண்கள் உதவி செய்வதில்லை. ஆனால் பெண்களுக்கு முழுச்சுதந்திரம் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறார்கள்,

'பெண்கள் ஆடம்பரப் பொருளாக காட்டப்படுகிறார்கள் வியாபார விளம்பரத்திற்கும் பயன்படுத்தப்படுகிறார்கள்.

'ராதா பெரிசான பின் (பார்த்திபனின் சிறுகதை) கதையில் அருவருப்பு' என்று குறிப்பிடுபவர்கள், உண்மையில் பெண்கள் நாளாந்தம் வீட்டில் அடிமையாக நடாத்தப்படுவதை உணருவதில்லை..

பெண்கள் விடுதலை பற்றிய கருத்துக்கள் செல்விகள், உமா, ரஞ்சினி, நிருபா, திருமதி பராராஜசிங்கம், திருமதி நாகலிங்கம் ஆகியோர் முன்வைத்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்கள் விடுதலை பற்றிய விவாதத்தின் பின் மலையக மக்கள் பற்றிய விவாதம் இடம் பெற்றது. எலையா ஆசிரியர் தொடக்கி வைத்த மலையகமக்களின் பற்றிய பிரஜா உரிமை பற்றிய கருத்துக்கள் சேரன் வெகுஜனம் ஆசிரியர், சிந்தனை ஆசிரியர் குழு ஆகியோர் பங்கு கொண்டனர்.

இவ்விவாதங்களின் பின் திரு.கோணேஸ் அவர்களின் "சர்வதேச சங்கீதச் சுரத்தட்டு" எனும் புத்தக வெளியீட்டு விழா நடைபெற்றது. எதிர்காலஆலோசனை என்கிற பகுதியில் அன்னராசா என்பவர் மேற்கு ஜேர்மனி கல்விச் சேவை பற்றி பேசினார். இலக்கியச்சந்திப்பிற்கான நிரந்திரக் குழு ஒன்றை தீர்மானிக்கும் யோசனை நிராகரிக்கப்பட்டு, தற்காலிகக் குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டது. அடுத்த இலக்கியச் சந்திப்பு ஸ்ருட்கார்ட்டில் நடைபெறும் என்றும், சிறந்த ஆக்கங்களுக்கான பரிசளிப்பு வழங்கப்படுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இறுதியாக கவிஞர் சேரனின் கவிதா நிகழ்வு நடைபெற்று சந்திப்பு நிறைவு பெற்றது.

---

இலக்கியச்சந்திப்பு பற்றி தூண்டில், எலையா ஆகிய இரு பத்திரிகைகளில் வெளியான கருத்துக்கள் பற்றி தேனீக்களின் கருத்துக்களை இங்கு முன் வைப்பது அவசியமாகிறது.

தூண்டில் கலம் 16ல் வெளியான 'நமது விமர்சனம்' என்கிற பகுதியில் இலக்கியச்சந்திப்பு பற்றி விமர்சித்திருக்கும் கூடலோடிகள், இலக்கியச் சந்திப்பின் போது நடைபெற்றதாக கூறும் பலவிடயங்களை எந்த நோக்கில் இருந்து அவதானித்து உள்ளார்கள் என்பது புரியவில்லை.

இலக்கியச் சந்திப்பில் பெரும்பாலான நேரங்கள் மௌனமாக இருந்துவிட்டு, சுயவிமர்சனம் என்கிற போர்வையில் மற்றவர்களை விமர்சித்து இருப்பது புதிராக உள்ளது(?). சிந்தனை ஆசிரியரின் "தேர்தல்" பற்றிய கருத்தில் தூண்டிலை பற்றி அவர் கூறுகிறார் என்று குறிப்பிடும் கூடலோடிகள் அதற்கு அங்கு பதில் கூறாது இருந்துவிட்டு, சிந்தனை ஆசிரியர் பேனாவை தூக்கி எறிந்ததாகவும், புதுமை ஆசிரியர் பேப்பரை தூக்கியெறிந்ததாகவும் கூடலோடிகள், நடக்காத ஒரு சம்பவத்தை விமர்சனத்துடன் ஒப்பிட்டு கொச்சைப்படுத்தியிருப்பது என்னவென்று விளங்கவில்லை. "பிழை பிடிக்கும்" சுபாவத்துடன் விமர்சிப்பதை தவிர்க்கும் அதே சமயம், நிறைவான அம்சங்கள் இவற்றுள் பாதிப்பவைகளை கவனத்திற்கொள்ளவேண்டும்.

வீடியோவில் இலக்கியச்சந்திப்பு பதிவு செய்வதை எதிர்க்கிறோம் என்று கூறிவிட்டு, இலக்கியச்சந்திப்பு காத்திரமாக அமையாததால் வீடியோ பதிவு தேவையற்று என்கிற நோக்கில் எழுதியிருப்பது குழப்பமாக உள்ளது. வாசகர்களின் எண்ணிக்கையை வைத்து இலக்கியச் சந்திப்பை ஒருவிதத்தில் அர்த்தமற்றதாக கருதும் கூடலோடிகள், தவறுகளைச் சுட்டிக்காட்டுவதோடு நிற்காமல் இலக்கியச்சந்திப்பின் போது இடம்பெறும் புதிய முயற்சிகளை தட்டிக்கொடுத்து எழுதவும் வேண்டும்.

எலையா 16ல் வெளியான இலக்கியச் சந்திப்பு பற்றிய கட்டுரையில் ஆங்காங்கே சில குறைபாடுகளை காணக்கூடியதாக உள்ளது. பெண்விடுதலை பற்றி யாரும் சரியான தெளிவான கருத்துக்களை கூறவில்லை என்று கூறும் கட்டுரையாளர், பெண்கள் இம்முறை பெண்ணடிமைத்தனத்தைப்பற்றி கதைக்க முன் வந்ததை சுட்டிக்காட்டவில்லை. பெண்விடுதலை என்பது கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள புரிந்துணர்வால் ஏற்படுவதல்ல. இதே சச்சரவை புதுமை பத்திரிகையாளர்களுடன் கொண்டிருக்கும் எலையா, "பல குடும்பங்களில் கணவனும், மனைவியும் வேலைகளை பங்கு போட்டுக் கொண்டு பெண்ணடிமைத்தனத்திற்கு விடைகொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று கூறியிருப்பது பெண்விடுதலைக்கு சரியான விவாதம் என்று நினைக்கிறார்களா? சொந்த கருத்துக்களை கூறுபவர்களை குழப்பல்வாதிகள் என்று கூறியிருப்பது (புதுமை பத்திரிகையாளர்களை) எலையா போன்ற வளர்ந்த பத்திரிகைக்கு ஏற்றதல்ல.

தொடர்ச்சி 15ம் பக்கம்....,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நவீன பெண்ணடிமைத்தனத்தில் பெண்களின் பங்கு என்ன இறைவா?

பெண்களின் அடிமைக்கு பல காரணங்கள் அமைந்த போதும் பெண்களின் பங்கும் முக்கிய காரணமாக அமைகின்றன. தாய் பிள்ளையை பெற்று எடுக்க முன்பு, கருவில் உள்ளபோதே பெண்பிள்ளை என்று கேள்விப்பட்டவுடனேயே தாய் கருவில் இருக்கும் பிள்ளையிட்டு வேதனைப்பட ஆரம்பிக்கிறாள். அங்கேயே பெண் பிறப்புக்கு முன்பே பெண் வேதனைக்குரியவளாகிறாள். இப்படியான சூழ்நிலையின் மத்தியில் அப்பெண் பிறந்து வாழ வேண்டுமாயின் எப்படியான வேதனையான கட்டங்களை அனுபவிப்பாள், அனுபவிக்கவேண்டியிருக்கும்.

அதைவிட்டுமா, மூடநம்பிக்கை வளர்ந்த, அறிவற்ற பல பெண்கள் மத்தியில் இருக்கும் மற்றுமொரு செயல் என்னவென்றால், பெண்பிள்ளையை முதல் பிள்ளையாக பெற்ற தாயை நல்லகாரியங்களில் அதாவது திருமணம், பெண்பார்ப்பு, பூப்புனித நீராட்டு விழா போன்ற நிகழ்ச்சிகளில் முன்னிற்கக்கூடாது என்று ஒதுக்கி வைக்கின்றனர். பெண்களின் அடிமைக்கு பெண்களே முக்கிய பங்கு வகிக்கிறார்கள். இதேபோலத்தான் சீதனப்பிரச்சினையால் எத்தனையோ திருமணம் நின்றதற்கும், ஆண்களைப் பெற்ற தாயாகிய பெண்களே காரணமாகும். இதைவிட திருமணத்தின் பின்பும் சீதனப்பிரச்சினையால் குடும்பப் பிரிவுக்கும், தற்கொலைகளுக்கும் காரணமாக ஆண்களைப் பெற்ற தாய்மார் காரணமாக அமைகின்றனர்.

இதைவிட பெண்களைப் பெற்ற பெற்றோர்களில் சிலர் படிப்பிக்கவும் பின்நிற்கின்றனர். அதற்காக பல காரணங்களைச் சொல்லி தடுத்துவிடுகின்றனர். அதாவது பெண்கள் ஒரு சில வகுப்புக்கள் படித்தால் போதும் என்றும் திருமணத்திற்கு பின் சமைப்பதற்கு சமையல் அறைக்கு போக வேண்டியதுதானே என்று சொல்லி படிப்பில் தடைவிதிக்கின்றனர். இதனால் பல பெண்கள் போதிய படிப்பறிவு இல்லாமல் வெளியுலகம் தெரியாது வாழவேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இதனால்பல வடிவங்களில் பிரச்சினைக்கு முகம் கொடுக்கவேண்டியதாக அமைகின்றது. சமூகத்தில் தனது கருத்தை தெரிவிக்க முடியாத நிலையிலும், திருமணத்திற்குப் பின்பு சீதனத்தினால் அமைக்கப்பட்ட படித்த கணவனிடம் சுயகருத்தையோ, சரி, பிழையையோ தெரிவிக்கும் திறமையற்று, ஒரு அடிமையாக்கப்படுகிறாள். சில பெண்கள் கணவனின் குடும்பத்தினரால் மனிதாபிமானமற்ற முறையில் நடாத்தப்படுகின்றார்கள்.

அதோடு சில பெற்றோரும் பெண்களை மேல்படிப்பு அல்லது பட்டங்கள் பெற்றால், ஏன் உத்தியோகம் பார்த்தால், இதை வைத்துக் கொண்டு பெண்கள் தமக்கு தகுதியான கணவனைக் கேட்டால், எங்களால் அவ்வளவு தகுதிக்கு ஏற்ற வரன் தேடி சீதனம் கொடுக்க முடியுமா என்றும் கூட படிப்பை தொடர விடாமல் கட்டுப்பாடு விதித்து விடுகின்றனர். அதோடு அளவுக்கு அதிகமான பணம் இருக்கென்று எண்ணி ஏன் படிப்பு என்று படிப்பை முடித்து திருமணத்தை செய்து வைக்கின்றனர். இப்படியாக பெண்வர்க்கத்தினரின் திறமையை முன்னேற்றத்தை முற்றாகவே அழித்துவிடுகின்றனர். பெற்றோர்கள் எதிர்காலத்தில் எங்கோ உயர்ந்த அறிவுச்சுடராக இருக்க வேண்டிய பெண்களை வாய்திறந்து கதைக்க கூட தகுதியற்ற நிலைக்கு ஆளாக்கி அடிமைகளாக்கப்பட்டுள்ளனர்.

www.tamilarangam.net

சிலர்: பெற்றோர்கள், மேல்படிப்பு படிக்க போனால் அங்கே தகாத பழக்க வழக்கத்திற்கு பெண்கள் ஆளாகி விடுவார்களோ என்று எண்ணி தடுத்து விடுகின்றனர். இப்படிப் பலவாறு பெண்களை தடைவிதித்து அடிமைவிலங்கு பூட்டக் காரணம் பெற்றோரின் அறியாமையே. அதோடு பல வழிகளில் சிந்தியாது ஒரு வழியாகிய திருமணம் என்கின்ற ஒன்றை செய்து வைத்தால் போதுமென்று அக்கால கட்டம் வரும்வரை காத்திருக்கின்றனர்.

இப்படிப் பெண்களின் அறியாமையை ஓரளவாவது நீக்க வேண்டுமாயின் பெண்கள் மத்தியில் விழிப்புணர்வுள்ள சமுதாயமாற்றம் அமைவது தவிர்க்க முடியாத ஒன்றாக அமைய வேண்டும். இதற்கு எங்கள் பாரம்பரியங்களை கற்றுள்ள மூடநம்பிக்கையுடன் கூடிய அநாகரிகங்களை அகற்ற வழிவகுப்பதுடன், சகலருக்கும் குறைந்தபட்சம் இரண்டாம்தரக்கல்வி அத்தியாவசியம் என்ற நிலைப்பாடு நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இதனால் குறைந்தபட்சம் வாசனை அறிவாவது பெற்றுக் கொள்ள இலகுவாகின்றது. பின் புரிந்துணர்வுகளை அறிந்து கொள்ளக் முடிகின்றது. ஆனால் ஒரு சந்தேகம்?. படித்த பெண்கள் மத்தியில் மூடநம்பிக்கைகள், சீதனவிருப்புக்கள் இல்லையா? என்று கேள்வி எழுகின்றது. உண்மை. இப்படிப்பட்ட பெண்கள் எந்தச் சூழ்நிலைகளில் பயின்றார்கள், வாழ்ந்தார்கள், வளர்ந்தார்கள் என்பதை அவதானிக்கவேண்டும். இவர்கள்தான் சமூகமாற்றத்தை விரும்பாத எதிர்ப்புரட்சியாளர்களாக உருப்பெறுவார்கள். பெண்ணடிமையை உடனடியாக மாற்றிவிடலாம் என்று எண்ணுவதிற்கில்லை. இது ஒரு ஒட்டுமொத்தமான சமூகமாற்றத்துடன் கூடிய ஒன்று. இதை பெண்கள் சகலரும் உணர்ந்து அறிந்து புரிந்துணர்ந்தாலே ஒழிய இந்த அடிமைவிலங்கை உடைப்பது கடினமே.

செங்குளவி

---

# மே 1

- காங்கேசு கோவிந்தகுமார்

மே ஒன்று
தொழிற்சாலையே
உனது
இயந்திர உறுப்புக்களுக்கு
வியர்க்காத நாள்
நீ கூட அன்று
புகைக்காத நாள்

அன்று மட்டும்
பாட்டாளிகளுக்கு
பாயசாலை

உலக முதலாளித்துவம்
உறிஞ்சிய
இரத்தத்தின் தேற்றக்

கணக்குகளை நாங்கள்
தேடிப்பார்ப்பது
இந்த ஆண்டுப்
காற்றிலன்று வருசை வழக்கமாகி
விட்டது
வா மேதினமே
இன்னும்
இலங்கையில்
கடிகாரங்களை

ஒலிக்கவைக்கும் முதலாளித்துவம்
மூச்சு விட்டுக் கொண்டுதானே
இருக்கின்றது....,

எம் உழைப்பை
உறிஞ்சி ஏற்றுமதிப்பொருட்களில்
அடைக்கும்
தொழிற்சாலைகள்
ஓர் ஆயிரம் இருக்கின்றனவே..

நீ விசாரிக்க
வருவதானால்
விலாசம் இதுதான்.
மாடி வீடுகளில் அவர்கள்
இரவுகளில் மட்டுமே
எம் வியர்வை தோய்ந்த
பணம் எண்ணுமவர்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திகள்

..டந்த புத்தாண்டு தினமன்று நடைபெற்ற குண்டு வெடிப்பு ..ம்பவத்தின் போது நால்வர் கொல்லப்பட்டதுடன், 27 ..பேர் காயமடைந்தார்கள். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தி..லிருந்து நகரை நோக்கிச் செல்லும் பழம் ரோட்டில் ..டைபெற்ற இச்சம்பவம் சமார் மாலை 6.30 மணியள..வில் நடைபெற்றது. அமைதிப்படை முகாம் அருகில் நிறுத்தி ..வைக்கப்பட்ட வானிலிருந்து இக்குண்டு வெடிக்கப்பட்டது.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

..14.03.89 அன்று காலை 9.45 மணியளவில் திருமலை ..ளிக்கூட்டு கோபுரத்திற்கருகே காரிலிருந்து வெடித்த ..ண்டு வெடிப்புச் சம்பவத்தினால் 44 பேர் பலியானார்கள். ..வர்களில் 42 பேர் சிங்களவர்களும், 2 பேர் தமிழர்க..ளும் ஆவார்கள்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

..வனி ஓயா என்கிற பெயரில் அமைக்கப்படும் புதிய மாவ..ட்டம் வடக்கு-கிழக்கை துண்டாடும் முயற்சியென்றும் இதற்கு ..கல இயக்கங்களும் குரல் எழுப்ப வேண்டுமென்று ஈரோஸ ..ம், பெளாவும் அறிக்கை விடுத்துள்ளன.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

..யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளால் தம் ..ள் கணவன்மாரை இழந்த 90 விதவைகளுக்கு சுயதொழில் ..யற்சியில் ஈடுபடுவதற்கு உதவியளிக்க செஞ்சிலுவை சங் ..கம் முன்வந்துள்ளது. பாலை, வேலணை, கரவெட்டி ஆகிய இட..ங்களில் இதற்கான திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

..சிறைவாசம் அனுபவித்து வந்த அரசியல் கைதிகள் 130 பே..ர் ஈரோஸ் இயக்கத்தின் வேண்டுகோளையடுத்து விடுதலையானா..ர்கள். மகசின் சிறையிலிருந்து விடுதலையான இவர்களை ..ஈரோஸ் தலைவர்கள் நேரில் சென்று பொறுப்பேற்றனர்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

..7.04.89 அன்று நண்பகல் யாழ்ப்பாண மேலதிக அரசா..ங்க அதிபர் ஏ.இராமநாதன் வீட்டில் வைத்து சுட்டுக் ..கொல்லப்பட்டார்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

..கொடி சித்த ஆயுள் அரசினர் வைத்திய சாலையைச் சேர்..ந்த டாக்டர் விஜேந்திரன் (43) 18.04.89 அன்று காலை 11 மணியளவில் யாழ் இந்துக் கல்லூரி முன்னால் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

வடக்கு கிழக்கில் சேதமுற்ற கட்டிட சிதைவுகளை அகற்ற ஒரு கோடியே 20 லட்சம் ரூபா ஒதுக்கப்படும் என்றும் ரூபா 9 கோடி செலவில் 30000 வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படும் என்றும் முதல்வர் திரு.அ. வரதராஜப்பெருமாள் அறிவித்துள்ளார்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு.எம். பஞ்சலிங்கம் (54) 1.05.89 அன்று காலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். நல்லூர் செம்பியன் வீதியில் உள்ள சகோதரர் வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட இவரது உடலில் இருபதிற்கு மேற்பட்ட சூட்டுக் காயங்கள் இருந்ததாக கூறப்படுகிறது.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கடந்த மார்ச் மாதம் 30ந் திகதியளவில் திருகோணமலையில் வைத்து கடத்தப்பட்ட ஈரோஸ் முன்னாள் உறுப்பினரும், மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசசபைக்குழு இணைப்பாளருமான திரு.குமாரவடிவேல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

11ம் பக்க தொடர்ச்சி....

வெகுஜனத்தில் வந்த ... யங்கத்தில் இடம் பெற்ற 'மலையக மக்கள்' பற்றிய விவாதத்தில் சிந்தனை ஆசிரியர் முந்திக் கொண்டு ...ரில் சொன்னதாக கூறும் ஏலையா, கவிஞர் சேரன் அவர்கள்தான் சிந்தனை ஆசிரியருக்கு முன்னொடி பதில் சொன்னதை மறந்து போய் விட்டதுதான் வேடிக்கையாக உள்ளது. தேனீ ஆசிரியர், ஏலையா சஞ்சிகை 'மலையக மக்களுக்கெதிரான கருத்தை கொண்டிருக்கிறது' என்கிற வகையில் எதனையும் கூறவில்லை இலக்கியச் சந்திப்பின் போதே தேனீ ஆசிரியர் இதற்கான பதிலை கொடுத்ததை ஏலையா ஆசிரியர் விளங்கிக் கொள்ளவில்லை என நினைக்கிறோம். – தேனீக்கள் –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

..................................................

வடகிழக்கு மாகாணங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு தொழிற்சங்கங்கள் அமைத்து, அவர்கள் உரிமைகளுக்காக போராடி அவர்களை நலன்களை பேணவும் ஈ.பி.ஆர்.எல்.எப்பினர் முடிவு செய்துள்ளது. இதன்படி வடக்கு கிழக்கில் தொழிற்சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக ஈ.பி.ஆர்.எல் எப் அறிவித்துள்ளது.

..................................................

வடக்கு கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைப்பது பற்றி பழைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா பிரகடனம் ஒன்றை செய்திருந்தது இப்போ பெரும் சிக்கலை உருவாக்கியுள்ளது. வருகிற யூலை மாதம் 5ந் திகதி நடைபெறவுள்ள இந்த கருத்து வாக்கெடுப்பு கிழக்கு மாகாண மக்களின் கருத்தை அறிவதற்காக அங்கு மட்டுமே நடைபெறவுள்ளது. ஈழ விடுதலை இயக்கங்கள் இது தேவையற்றது என்று தமது கருத்தை தெரிவித்திருந்தன. முஸ்லீம் காங்கிரசும் இந்த வாக்கெடுப்பு அவசியமற்றது என அறிவித்திருந்தது. இந்த வாக்கெடுப்பு நிகழுமாயின் கிழக்கு மாகாணத்தில் கலவரங்கள் நிகழக்கூடுமென பத்திரிகைகள் அச்சம் தெரிவித்துள்ளன.

..................................................

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைவரி, திரு.எஸ்.ரீ.என். நாகரத்தினம் அவர்களின் அஞ்சலிக்கூட்டம் நாவாந்துறை சே.ஜே.வித்தியாலயத்தில் நடைபெற்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும், அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் பல போராட்டங்களை நடாத்தியவர். அவரது அஞ்சலிக்கூட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சிலரும், ஈழவர் ஜனநாயக முன்னணி உறுப்பினர் சிலரும், எழுத்தாளர் திரு.பாலியல், திரு.பெஞ்சமின், திரு. ஜெக்கம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

..................................................

புத்தளம் மணல்குண்டு என்ற இடத்தில் ஏழை முஸ்லீம் மக்களின் 193 குடிசைகள் எரிக்கப்பட்டது தொடர்பாக இது வரை யாரும் அடையாளம் காட்டப்படவில்லை. சீருடையில் வந்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட இச்சம்பவம் கண்டிக்கப்படாது போவதும் அதற்கெதிராக இவர்களை பிரதிநிதித்துவ - படுத்தும்

தலைமைகள் குரல் கொடுக்காது விடுவதும் மேலும் இ பவங்கள் நடைபெறுவதற்கு வாய்ப்பை உருவாக்கும் எ ணம்.

..................................................

விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் நடாத்தும் பேச்சுவா தையை முழுமையாக வரவேற்கும் நாம், இப்பேச்சுவா தையால் ஏற்படும் இணக்கங்கள் ஏனைய இயக்கங்களை திக்குமாயின் அது அவர்களை மீண்டும் பிரிவாத இட்டுச் செல்லும் என முஸ்லீம் காங்கிரஸ் அறிவித்துள்ள

..................................................

மார்ச் மாதம் 19ந் திகதியளவில் கல்முனையில் நடை வன்முறைச் சம்பவங்களின் பின்னும் இந்திய ராணுவமும், கைப் பொலிசாரும் கூட்டு ரோந்து நடவடிக்கையை மே கொண்டு வருகின்றனர். மூன்று முஸ்லீம் கடைகளும், த அச்சகம் ஒன்றும் எரிக்கப்பட்டுள்ளன. இரு சமூகங்களு யில் நடைபெற்ற வன்முறை சம்பவங்களின் பின்னணியில் சக்திகளை இனம் கண்டு கொள்வது அவசியமாகிறது. னவெறியை வளர்த்து மோதல்களை உருவாக்கும் இவ்வன்மு சக்திகள் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றி கொள் போன்ற பல நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என இரு சமூகங்களும் கவனமாக இருக்கவேண்டும் என்பதுடன் ந்கிணர்வுடன் செயற்படவேண்டும் என விரும்புகிறோம்.

..................................................

வெலிஓயாவை தனி மாவட்டமாக்கும் உத்தேச எண்ணத் அரசு கைவிடா விட்டால் பாராளுமன்றத்தில் இடம்பெ றும் தமிழர் குழுக்கள் ஜனநாயக ரீதியிலான எதிர்ப் நடவடிக்கைகளில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக தெரிய கிறது. பாராளுமன்றத்திற்கு கறுப்புப்பட்டி அணிந்து செ தல், முக்கிய விவாதங்களை பகிஷ்கரித்தல் போன்ற நட டிக்கைகளாக இவை இருக்கும். ஈ.பி.ஆர்.எல்.எப், மிழர் விடுதலைக்கூட்டணி, டெலோ ஆகியன்றின் எம்பிக்க இது தொடர்பாக கலந்து ஆலோசித்து வருகின்றனர்.

—23.06.89

..................................................



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பத்திரிகை கலந்துரையாடலுக்கு நிர்ப்பந்தி!

மேற்கு ஜேர்மனியில் "அரசியல்" செய்யும் குழுக்களின் கருத்து பரிமாறல்கள், கூட்டுக்கள், மோதல்கள் ஆகியன பல நிகழ்ந்து வந்துள்ளன. இவை பெரும்பாலும் ஈழத்தேசிய விடுதலை இயக்கங்களுடனான நடவடிக்கைகளாகவும், விடுதலைப்போராட்டத்தைப் பற்றியதாகவும் இருந்து வந்துள்ளன. இவற்றில் இடதுசாரி என்னும் கொண்ட சிலர் பத்திரிகைகளை வெளியிட்டு வந்தாலும், குறிப்பிட்ட ஒரு குழுவினர் மட்டும் எவ்வித பத்திரிகைகளிலும் பங்கெடுக்காமல், அல்லது பத்திரிகை எதையும் வெளியிடாமல் "தொழிலாளர்பாதை" எனும் பத்திரிகையை மட்டும் விற்பனை செய்து கொண்டு ஒரு "அரசியல்" செய்து வருகின்றனர்.

இவர்களில் சிலர் கடந்தகாலத்தில் வெளி வந்து நின்று போன "எண்ணம்" பத்திரிகையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாகவும், 1986 களில் "எண்ணம்" வெளியீடுகள் என்று சில சின்ன பிரசுரங்களை வெளியிட்டு வந்தாலும், இவர்கள் இன்று செய்யும் அரசியலுக்கும், அன்று வெளியிட்ட வெளியீடுகளுக்கும் உள்ள தொடர்புகள், வேறுபாடுகள் இன்னமும் பகிரங்கப்படுத்தப்படாமலே இன்னமும் இருக்கின்றன. மேற்கு ஜேர்மனிக்கு புதிதாகவருகின்றவர்கள் மத்தியில் தங்களுடைய பழைய வரலாறுகளை மறைத்து காலத்துக்கு காலம் மாறும் புதிரான அரசியலை செய்து வருகின்றனர்.

இந்தியாவில் அச்சாகி வெளிவரும் "தொழிலாளர் பாதை"யை விற்பதைத் தவிர வேறு எந்த விதமான பகிரங்கமான, ஆக்கபூர்வமான எழுத்துப் பிரசுரங்களை தமிழில் வெளியிடுவதில்லை.

(அப்பப்போ பா டொச்சிலும், ஆங்கிலத்திலும் சில சின்னப் பிரசுரங்களைத் தவிர) ஒரு சிலர் கூடும் இடங்களில் "நான்காவது அகிலம்" "காட்டிக் கொடுப்பு" "அதற்கு நிர்ப்பந்தி" இதற்கு நெருக்கு" "தலைமையை மாற்று" என்கிற சில வார்த்தை பிரயோகங்களுடன் பிரச்சாரம் செய்கின்றனர். சிலர் வித்தியாசமாக இவர்களை எதிர்த்து விமர்சனம் செய்தால் "பப்லோவாதிகள்" "ஸ்டாலினிஸ்டுகள்" "சோறுடிப்பு" என்கிற வார்த்தை பிரயோகங்களை விமர்சிப்பவர் மீது கூறுகின்றார்கள். விமர்சிப்பவர்களுக்கு "பப்லோ" என்றால் யாரென்றும் புரிவதில்லை. இதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளுக்கும் இதைப் பற்றி சரியான விளக்கம் கொடுக்கத் தெரிவதில்லை.

ஜே.ஆர், பிரேமதாசா போன்றோ கும்பல்களை இவர்கள் திட்டுவதை விட, இடதுசாரிகளை திட்டித்தீர்ப்பது இவர்களது பாரம்பரியமான கலையாக இருக்கின்றது. "ஸ்டாலினிஸ்டுகள்" "கூட்டுக்கொள்கையாளர்" "பப்லோவாதிகள்" "திரிபுவாதிகள்" வார்த்தைகளை கைவசம் நிறைய வைத்துக்கொண்டு இடதுசாரிகளை திட்டித்தீர்த்து கொள்கிறார்கள். இலங்கையில் வழிதவறிய இடதுசாரிகளுக்கு வக்காலத்து வாங்கவேண்டும் என்பது எமது நோக்கமல்ல, அவர்களுடைய தவறுகள் முழுமையாக விமர்சிக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடுகள் இருக்கமுடியாது. ஆனால் அந்த விமர்சனங்கள் எவ்விதம் மக்களுக்கு பிரயோசனமான முறையில், சுலபமாய் விளங்கத்தக்கவாறு முன்னெடுக்கப்படவேண்டும் என்பது அவசியம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று அந்த விமர்சனங்களை முன்வைக்கும் இந்தக்குழுவினரின் உண்மைகளையும் வெளிக்கொண்டு வருவது மக்களுக்கு அவசியமானதொன்று. இவர்களது நடவடிக்கைகளால் மக்கள் உண்மையான முற்போக்கு கருத்துக்களிலிருந்து அன்னியப்பட்டுபோகும் நிலைமைகள் ஏற்படுவதையும், இவர்களுடன் உழைத்த பல இளைஞர்கள் விரக்தியும், அதனால் அரசியலைவிட்டு போனதையும் காணும் போது, அரசியலின் ஆரம்ப கட்டத்தில் இருக்கும் இளைஞர்களுக்கு இது பற்றிய உண்மைகளை பகிரங்கப்படுத்துவது அவசியமாகிறது.

இந்தக் கலந்துரையாடலை இவர்களுடனும், மற்றவர்களுடனும் ஆரம்பிப்பதற்கு, முதலாவதாக 'இலங்கையில் தொழிலாளர் ஐக்கிய முன்னணிக்கான புரட்சிகர அமைப்பை ஆதரி' என்கிற தலையங்கத்துடன் (இதழ் 21, ஜன.பெப்.1989) வந்த "தொழிலாளர் பாதை"யை எடுப்போம். இப்பத்திரிகையில் இலங்கையின் 'ஐந்து முன்னணி தொழிலாள வர்க்கஸ்தாபனங்களுக்கு கடிதங்கள்' எழுதியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்கள். (பக்கம் 1, இரண்டாவது பந்தி). லங்கா சமசமாஜக் கட்சி, நவசமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் காங்கிரஸ் ...? கட்சிகளின் ஒரு ஐக்கிய முன்னணியை தாம் அமைக்க நவம்பர் 1988 இல் முயற்சி எடுத்ததாகவும் (பக்கம் 4, பந்தி 4) குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் அமைக்க இருப்பது இடதுசாரிக் கட்சிகளின் ஐக்கிய முன்னணியையா அல்லது தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கிய முன்னணியையா என்பது புரியவில்லை. ஏனென்றால் லங்கா சமசமாஜக் கட்சியும், மற்றைய கட்சிகளும் தம்மை தொழிலாளர் வர்க்கத் தளம் கொண்ட கட்சிகள் என அழைத்துக் கொள்கின்றன; ஆனால் அவை தொழிலாளர் வர்க்கத்தை உள்ளடக்கிய கட்சிகளல்ல என்பதை இவர்கள் அறியாமல் இருப்பது புதிரே. இந்தக் கட்சிகளின் தொழிலாளர் அமைப்புகளுக்கு (இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம், இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் .......) ஆகியவற்றிற்கு ஏதும் எழுதாமல் கட்சிகளுக்கு எழுதி தொழிலாளர்களை அணிதிரட்ட முயல்கின்றனர்?....

கட்சிகளின் கீழுள்ள தொழிலாளர்களுக்கு தமது அழைப்பை விடுத்துள்ளதாக இவர்கள் கூறினார்களா? ஆனால் இவர்கள் ல.ச.சமாஜக்கட்சியின் பதிலைப்பற்றி (பக்கம் 4, பந்தி 16) குறிப்பிட்டிருப்பது இவர்கள் கட்சிகளின் தலைமைகளின் பதிலைத்தான் என்பது தெளிவாகத் தெரிகின்றது. மேலும் இலங்கையின் மற்றைய தொழிலாளர் அமைப்புகளுக்கு ஐக்கிய முன்னணிக்கான அழைப்பை விடாமல் இருப்பதும் இவர்களின் குழப்பத்தையே காட்டுகின்றது. உதாரணத்திற்கு இவர்கள் அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்திற்கு அழைப்பு விடுவதானால், அதன் செயலாளர் குணசிறிமாறு அங்கம் வகிக்கும் அரசியல் கட்சியான 'சோசலிசத் தொழிலாளர் இயக்கத்திற்கு' அழைப்பு விடுவார்கள் போலும்....? இன்று வடக்கிலும், கிழக்கிலும் இருக்கும் தொழிலாளர் ஐக்கிய முன்னணிக்குள் கொண்டு வரும் நோக்கங்கள் இல்லாத அளவிற்கு இவர்களைப் 'பேரினவாதம்' பற்றிக் கொண்டு விட்டதா? ஆம் இதை சந்தேகிக்க இடமிருக்கின்றது. 4ம் பக்கத்தில் பிரசுரித்த கடிதத்தில் (பந்தி 14) கொலை செய்யப்பட்ட தொழிற்சங்கவாதியான 'தொழிற்சங்கத் தலைவர் எல்.டபிள்யு. பண்டித' பற்றி குறிப்பிட்டவர்கள், கொலை செய்யப்பட்ட தொழிற்சங்க வாதியான விஜயானந்தன், அன்னமலை, வனசிங்கா ஆகியோரை பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. ஜே.வி.பியால் செய்யப்படும் அரசியல்வாதிகள், தொழிற்சங்கவாதிகள், அரசாங்க உத்தியோகத்தவர்களின் கொலைகள், நிர்வாகத்தடைகள் பற்றி குறிப்பிடும் இவர்கள் மேற்குறிப்பிட்டவை யாவும் வடக்கிலும், கிழக்கிலும் நடைபெறுவதை ஏன் காண மறுக்கின்றார்கள்? இவற்றிற்கிடையில் என்ன வேற்றுமையை 'தொழிலாளர் பாதை'க்கான விரும்பு

(தொடர்ச்சி அட்டைப்பட பின்பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் விமர்சனங்கள்

தோழிகளே,

உங்கள் இரண்டாவது இதழ் பார்த்தேன். மகளிர் தினத்தையொட்டி பெண்ணடிமைத்தனம் பற்றியும் பெண்கள் விடுதலை பற்றியும் வந்த ஆக்கங்கள் மிக சிறப்பாக இருந்தன. குறிப்பாக தேவமல்லிகாவின் உன்னுடன் ஒரு நிமிடம் என்ற சிறு கட்டுரை நன்றாக இருந்தது. அவருக்கு எனது பாராட்டுக்கள் தோழியில் பிரசுரிக்கும் வீரகேசரிச் செய்திகளில் ஏனிந்த பாரபட்சம்?. செய்திகள் ஒரு பக்க சார்புடையனவாக இருக்கின்றன. இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஆதரிக்கும் செய்திகளும், குறிப்பிட்ட செய்திகளும் மட்டுமே கடந்த இரண்டு தோழிகளிலும் வெளியாகி இருந்தன. ஏனையவை உங்கள் கண்களில் படவில்லையா?. எமது இலக்கியம் கிராமத்து பெண்களின் கிழிந்த ஆடைகளை தைக்கும் ஊசி என ரீங்காரமிட்டு உம்மை ஓர் சமுதாய சீர்திருத்த இலக்கிய பத்திரிகையாக அறிமுகப் படுத்திய தோழியாரே, இரண்டு இதழ்களிலேயே உமது சுயரூபத்தை காட்டி விட்டீரே! இலக்கியம் என்ற பெயரில் என்ன பிரச்சாரம் செய்ய நினைக்கிறீர்?. உமது பாஷையில் இலக்கிய சீர்திருத்தம் இதுவென்றால் அதற்காக நான் வருந்துகிறேன்.

தோழமைகள்

பாஸ்கரன்.

தங்கள் பாராட்டுக்களுக்கு நன்றிகள். செய்திகள் பாரபட்சமானவை என்பதை மறுக்கவில்லை. ஏனென்றால் அவை உண்மையானவை. ஈழத்தில் பெரும்பாலான மக்கள் அளித்த தீர்ப்பை இங்குள்ளவர்கள் ஏற்க மறுத்தாலும் தோழி அவற்றிற்கு மதிப்பளிக்கிறது. அதன்படிதான் வெளியாகும் செய்திகளும், அடுத்ததாக எம்மை சமுதாய சீர்திருத்தவாதியாக என்றைக்கும் அறிமுகப்படுத்தவில்லை. சீர்திருத்தங்கள் எவையும் சமுதாயப் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டாது என்பதோடு தோழியின் முதலாவது ரீங்காரத்தை திரும்பி வாசிக்கவும்.

- தோழிகள்.

தோழிகளுக்கு,

நண்பர் ஒருவர் மூலம் கிடைக்கப்பெற்ற தோழியை பார்த்தேன். பெண்விடுதலைக்கு முன்னுரிமை கொடுத்தது நல்லவிடயம். இதுபோன்ற நல்லவிடயங்களை எழுதிவரும் பத்திரிகைகள் ஜேர்மனியில் குறைவாக உள்ளன. தேர்தல்செய்திகளில் யாழ்ப்பாணம், நல்லூர் போன்ற தொகுதிகளின் முடிவுகளை ஏன் வெளியிடவில்லை?. அங்கும் தேர்தல் நடந்ததுவே. பத்திரிகைச் செய்திகளை தொகுத்து ஒரே பக்கங்களில் வெளியிட்டால் நல்லது. சிறுகதை, கவிதைகள் (கோவையூரான்), ரீங்காரம் போன்றவை நன்றாக இருந்தன.

தோழமைகள்

சுகுமார்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டாவது ரீக்காரம் சற்று வித்தியாசமாக அமைந்தது வரவேற்கத்தக்கது. பெண்கள் விடுதலைக்காக நீர் இரண்டாவது தேவியை ஒதுக்கியிருப்பதில் இருந்து முழுக்க முழுக்க அரசியலை ஆக்கிரமித்திருக்கின்றீர். அச்சுப்பதிப்பின் குறைபாடு வாசிக்க சிரமப்படுத்தியது. பார்த்திபனின் சிறுகதை நன்றாக இருந்தாலும் "பொம்மை சமாச்சாரங்களை" எமது நாட்டுப்பெண்கள் தெரிந்து வைத்திருப்பார்கள் என்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது. கற்பனைக்கும் ஒரு அளவாவது இருக்க வேண்டாமா?. உனக்காக சில நிமிடங்கள், நெருக்கப்பொறுக்குதில்லையே, அதோடு உரையாடல்களும் நன்றாக இருந்தன. தேர்தல்செய்திகளையும், அறிக்கைகளையும் போட்டு பக்கங்களை வீணாக்கி விட்டீர். இவற்றை சுருக்கமாக போட்டு வேறு எதாவது சேர்த்திருக்கலாம். ஜெயபாலனின் கவிதை ஆண்களுக்கு ஒரு செருப்படி

மிக்கெய்ம் சந்திரன்

உமக்கேன் இந்த தேர்தல் வக்காலத்து?. சந்தர்ப்பவாதிகள் எல்லாரும் இப்போ பாராளுமன்றம் சென்றிருக்கிறார்கள். இதைவெளியிட்டு எங்களையும் எங்களது வயித்தெரிச்சலை கொட்டுகிறீர். மற்றப்படி எல்லாம் நல்லாக இருந்தன. தேர்தல் செய்திகள் வேண்டுமென்று யாராவது அழுதார்களா? தமிழ் மக்களின் போராட்டத்தை அவர்கள் அடகு வைத்து விட்டார்கள். நீரும் அதற்கு துணைபோக வேண்டா அடுத்த தேவியில் மாற்றத்தை எதிர்பார்க்கிறேன்.

எஸ்ஸன் நாதன்.

உங்கள் கருத்துப்படி சந்தர்ப்பவாதிகளென்று பெரும்பாலான மக்கள் தெரிவு செய்த பிரதிநிதிகளை அழைத்தால் அவர்களை தெரிவு செய்த மக்கள்....?. வெளிநாட்டில் இருக்கும் பாதுகாப்பான வசதியான வாழ்க்கை ஈழத்து மக்களின் நிலைப்பாட்டை ஏற்கமறுக்கிறதாயின், அது கவலைக்குரியதே. போராட்டத்தை யாரும் அடகு வைக்கவில்லை. ஈழப்போராட்டத்தின் பின்னடைவு அந்நிய ராணுவ தலையீட்டுக்கு வழிவகுத்தது. இதன் பின்னடைவுக்கு காரணமானவர்களை ஆராயாமல் சந்தர்ப்பம், அடகு என்று புலம்புவதில் அர்த்தமில்லை. தேர்தல் செய்திகளுக்காக யாரும் அழவில்லை, (குமார் என்கிற வாசகரின் விமர்சனத்தை பார்க்கவும்.)

தேனீக்கள்.

பங்குனி மாத இதழில் வெளிவந்த "பெண்களை இழிவு செய்யும் கொடுமை" என்றகல்லூரி மாணவிகளின் கலந்துரையாடலில் (கல்வி) விதவை என்ற சொல்லிற்கு ஆண்பால் சொல் தமிழில் இல்லை என்றும், விதவன் என்று பாரதி ஓர் சொல்லாட்சி முறையைக் கையாண்டிருக்கிறார் ஆனால் வழக்கில் வருவதில்லை என்றும் உள்ளது. இது வருந்தத்தக்கது, ஏனெனில் கல்லூரி மாணவிகளுக்கே தமிழில் உள்ள சொல் தெரியாமல் இருப்பதுதான்.

விதவை என்ற சொல்லிற்கு ஆண்பால் சொல் தபுதாரன். இது தமிழ் சொல்லாகும். அதாவது கணவனை இழந்தவள் விதவை, மனைவியை இழந்தவன் தபுதாரன். இது வழக்கில் வரவில்லை என்பதை ஓரளவு ஏற்றுக் கொண்டாலும் தமிழில் இவ்வாறு சொல்லே இல்லை என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

வெஸ்டர்ரேட் ரி. மகேந்திரகுமார்.

(சீதனம் பற்றி இவரது கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொதுவாக சீதனத்தொகையில்தான் தங்களது கௌரவம் என்பது இன்றைய இளைஞர்களின் மனதில் வேரூன்றி விட்டது. அதனோடு சிலர் சீதனம் வாங்குவதை நியாயப்படுத்த பல காரணங்கள் காட்டுகின்றனர். இவைகள் தவறு செய்பவர்கள் தங்கள் தவறுகளை மறைப்பதற்கு நியாயப்படுத்தும் காரணங்களே தவிர சரியானவையல்ல. கதைகள், கட்டுரைகளில் சீதனத்தை சாடுபவர்கள் நடைமுறையில் அவ்வாறு வாழ்கிறார்களா என்பது சந்தேகமே. வெறும் எழுத்துக்களில் நிற்காமல் நடைமுறையில் செயற்படுத்தி ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் முன்வரவேண்டும்.

காதலிப்பவர்கள் கூட இறுதியில் அதற்கும் ஓர் விலை நிர்ணயிக்கிறார்கள். இதில் பெண்களுக்கும் பங்கு உண்டு. சீதனம் கொடுப்பதில்லை என்று ஒவ்வொரு ஆணும், பெண்ணும் முன்வந்தால் நல்லதொரு சமுதாயம் தோன்றி வெகுகாலம் ஆகாது.

---

**மேற்கு ஜேர்மனியில் வெளியாகும் சஞ்சிகைகளின் பெயர்களும், முகவரிகளும், அவற்றின் சந்தா பற்றிய விபரங்களும்.**

| | | |
|---|---|---|
| LEIJA<br>லையா | "Aeleija"<br>K.Sivarajasooriar<br>Thresen str.30<br>D-4200 Oberhausen 1 | Free but postage should be sent |
| LAIVILAKKU<br>லைவிளக்கு | "Kalivilakku"<br>S.Pakianathan<br>Droote 13,<br>D-4600 DORMUND 14 | 15 DM<br>(Bankaccount number not given) |
| MATHUKURAL<br>மது குரல்<br>கள் வெளியீடு } | "Namathu kural"<br>Frauen Kreis<br>Information Zentrum<br>Overweg str.31<br>D-4690 HERNE 1 | Free but postage should be sent |
| THUMAI<br>துமை | "Puthumai"<br>Mainzer Landstr.147,<br>D-6000 FRANKFURT 11 | 16 DM<br>(Bankaccount numbe not given) |
| NTHANAI<br>ந்தனை | SINTHANAI<br>Olgastr 49<br>D-7000 STUTTGART 1 | 20 DM<br>Bank:Landesgirokasse<br>Stuttgart<br>Acct Nr:3403185<br>BLZ 600 501 01 |
| ENEE<br>தனீ | THENEE<br>G.Kanagathhran<br>Seestr. 55<br>7144 Asperg | 20 DM<br>Bank:Landesgirokasse<br>D-7144 Asperg<br>Acct Nr:7817998054<br>BLZ :600 501 01 |

| | | |
|---|---|---|
| THOONDIL<br>தூண்டில் | Thoondil<br>Sudasienburo<br>Grosse Heimstr.58<br>D-4600 DORTMUND 1 | 48 DM<br>Bank:Sparkasse<br>Dortmund<br>Acct Nr:57 1001 799<br>BLZ:440 501 99 |
| VEKUJANAM<br>வெகுஜனம் | VEKUJANAM<br>A.Alex<br>Zimmer 06.3<br>Kirchweg 111<br>Niederbergheim<br>D-4788 WARSTEIN 2 | 20 DM<br>(Bankaccount number not given) |
| VANNATHUPOOCHI<br>வண்ணத்திப்பூச்சி | Vannathupoochi<br>V.Nagalingam<br>Hombourgerstr 2<br>D-3538 MARSBERG 9 | Free but postage should be sent |

சுவடுகள் பத்திரிகை நோர்வேயிலிருந்து வெளியாகிறது.

**சுவடுகள்**

RETUR ADRESSE:

SUVADUKAL

HERSLEBS GATE 43
0578 OSLO 5
NORWAY
TLF. (02) 67 47 76

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உயர்ந்த பனைகளுக்கும், முள்முருக்கைகளுக்கும் பதில்....



இப்படி இன்னமும்
எத்தனை நாட்களுக்கிருந்தாலும்?....
அம்மா,
சகோதரர்,
காதலி,
தோழர்கள்,
அரசு
இப்படி அருக்கருக்காக பதில்களுக்காகக் காத்த,
முகாம் முகட்டில் தொங்கும் என் விழிகள்?....

உணர்வுகள் ஒரு புறிக்க
வீதியில் இறங்கிய என்னை,
பச்சை இயற்கை 'ஹாய்' என வரவேற்றது....
சுற்றிலும் உயர்ந்த பனைகளுக்கும், முள் முருக்குகளுக்கும் பதில்,
குளிர் காலத்தை சகித்து நிற்கும் பைன் மரங்களும், ஆப்பிள் மரங்களும்.
தூரத்தே வேகமாகத் தெரியும் 'ஓட்டோபான்'களுக்கு
சம்பந்தமில்லாமல் இங்கு நீண்ட 'ஜோரன்' எவள்
உழப்பட்டு, பனிப்போர்வைக்காக ஆகாயத்தை காத்து கிடக்கிறது..
ஏதோ ஒதுக்கிய பச்சை விரிப்பில் நடனம் புரியும் கால்களுக்கு ஏற்ப
எங்கோ ஒரு மூலையில் நிசப்தத்தை உடைத்து
வேகமாக ஒலிக்கும் இதயம்....
திடீரென குறுக்கே 'மலே' என உயரும் பச்சைப்புட்கள்
என் நிறத்தே மேனியின் பிறப்பு தேசம் கேட்கும்,
கிராமத்து எல்லை தாண்ட அனுமதி மறுக்கும்....
எனது தேசத்தில் நேற்றைய வரை
காற்றும் புக மறுக்கப்பட்டு,
சூரிய கதிர்கள் நுழைய அனுமதிக்கப்படாத காடுகள்
நெஞ்சில் கனக்க இந்த திறந்த வெளியில் நான்...

இங்கு எழுதும் விரல்களும்,
நடனம் புரியும் கால்களும்
இளைஞனின் இதயமும் குளிர்ந்து போக....
மீண்டும் தடித்த போர்வைக்குள்
ஒடுங்கும் என் உணர்வுகள்....

திம்பா (85)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்